# கல்பதரு
# ஆரியலிங்கோபாஸனை.

ஸ்ருதி - ஆகமம் - சாஸ்திரம்

சென்னை
1922

JL
LDm21,N22KA
N22.1.5-8
221392.

Jl
LDm'2 U, 9 N22 KA
N22, 1.5-8

221392

ஸ்ரீ







9 - NOV 1922

# KAL?ATHARU

# ARIYA VIDYA VIMARSANAI.

# கல்பதரு-ஆரிய வித்தியா விமர்சனை.

**A monthly magazine on medical science.**

இது
யூநானி ஆயுர்வேத வைத்தியசங்கத்தினரால்
பிரசுரிக்கப்படும் ஓர் மாதாந்திரத் தமிழ்சஞ்சிகை.

இதன் வருடசந்தா

உள்நாட்டிற்கு ... ... ... ... ... ரூ. 1 8 0
வெளிநாட்டிற்கு ... ... ... ... ரூ. 2 0 0

**Printed and Published by
M. V. Krishnasamilyer Editor & Proprietor
at the Sukhanjan Press, Brindavan
Kilpauk post, Madras.**

# கல்பதரு ஆரியவித்தியாவிமர்சனை.

## சந்தா விவரம்.

இச்சங்கத்தின் மெம்பர்களுக்கு இச்சங்கத்தினரால் அச்சியற்றும் சகல சாஸ்திரங்களும், செய்யப்படும் சகல அநுஷ்டானங்களும் மாதிரி அனுப்புவதுடன் கல்பதரு சஞ்சிகையும் அனுப்பப்படும், இதற்காக தனிக்கட்டணம் கிடையாது. சங்கத்தின் மெம்பர்களின் முதல்வருட சந்தா ரூ.5 0 0

### தபால்கூலியுள்பட கல்பதரு வருட சந்தா.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு ... ... ... ... ... | 1 | 8 | 0 |
| வெளிநாட்டிற்கு ... ... ... ... | 2 | 0 | 0 |
| தனி மாதிரி சஞ்சிகை ... ... ... ... | 0 | 3 | 0 |

(வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.)

முன்பணம் அனுப்புவோருக்கு மணியார்டர் கமிஷன் கிடையாது. ஆதலால் ரூ. 1 6 0 அனுப்பலாம் விபியில் வேண்டுமானால் சந்தா ரூ. 1 8 0 ரிஜிஸ்டர் விபிகமிஷன் 0 5 0 அணா ஆக 1 ரூ. 13 அணா செலவாகுமாதலால் முன்பணம் அனுப்பி சஞ்சிகையை பெறக் கோருகிறோம்.

(1) சந்தாதார் தங்கள் பெயரையும், விலாசத்தையும் விவரமாயும் பூரணமாயும் எழுதவேண்டும்.

(2) இதில் எப்பொழுது சேர்ந்தாலும் அவ்வருட சித்திரைமாச சஞ்சிகை முதல் கணக்கிட்டு அனுப்பப்படும்.

(3) இடம் மாறும்பக்ஷத்தில் உடனே தங்கள் புது விலாசத்தை தெரிவிக்கக் கோருகிறோம்.

### ஜீவிய சந்தா.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு ரூ. ... ... ... | 15 | 0 | 0 |
| வெளிநாட்டிற்கு ரூ. ... ... ... | 20 | 0 | 0 |

### விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு. ... ... | 30 | 0 | 0 |
| அரைபக்கத்திற்கு ரூ. ... ... ... | 16 | 0 | 0 |
| கால்பக்கத்திற்கு ரூ. ... ... ... | 8 | 8 | 0 |

விளம்பரவிகிதங்கள் எப்பொழுதும் முன்பணமாய் அனுப்பவேண்டும். லோகோபகாரமான விஷயங்களுக்கு கட்டணம் கிடையாது. இலவசமாய் விளம்பரம் செய்யப்படும். மற்ற விவரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

கல்பதரு ஆபீஸ்,
கீல்பாக்கம் போஸ்டு மதராஸ்.

---

உ

ஓம்

ஸ்ரீ குருப்யோநம:

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு."—குறள்.

# கல்பதரு ஆரிய வித்தியா விமர்சனை.

பதுமம் 1 துந்துபி வருஷம் இதழ் 5-6-7-8.
ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்.

## ஸ்ரீ சத்குருஸ்துதி.

ஆனந்த மானந்த கரம் ப்ரஸன்னம்
ஞானஸ்வரூபம் நிஜபோத யுக்தம்,
யோகீந்திர மீட்டியம் பவரோக வைத்யம்
ஸ்ரீமத் குரும் நித்யமஹம் நமாமி.

9 - NOV 1922

## மதிப்புரை.

ஆசிரமபோதினி:—திரிவியா பேக்ஷயின்றி லோகோபகாரமாய் பிரசுரிக்கும் இப்பத்திரிகையால் ஜனங்களுக்கு விசேஷ நன்மையுண்டாகுமென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. இதன் 6-7 சஞ்சிகைகள் கிடைக்கப்பெற்றோம். இதில் பல அருமை வாய்ந்த வியாசங்கள் அடங்கியிருக்கின்றன. வேண்டுவோர் தபால் செலவுக்காக 6 அணா அனுப்பி சஞ்சிகையைப்பெறலாம். இப்பத்திரிகை நீடூழியாய் நடைபெறுமாறு, கடவுள் அருள்புரிவாராக.

விலாசம்:— ஆசிரமபோதினி ஆபீஸ்
மெயின்ரோடு திண்டுக்கல்

இந்திய விவசாயம்:—இதுஓர் மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை. இதன் வருஷசந்தா தபாற் கூலியுள்பட ரூ 1-4-0 இதன் 9 வது இதழ் கிடைக்கப்பெற்றோம். இது விவசாயிகளுக்கு மிகவும் பிரயோசனமுடையது. விவசாயிகள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய அனேகவிஷயங்கள் இதில்காணலாம்.

விலாசம் இந்தியவிவசாயம் ஆபீஸ்
தெப்பகுளம் போஸ்டு திருசினாப்பள்ளி.

# "ஸுகாஞ்ஜனம்"

வியாதிஸ்தர்களுக்கு ஓர் நன்கொடை. சர்வரோக நிக்கிரக ஔஷதம்.

இந்த "ஸுகாஞ்ஜனம்" என்னும் தைலம் இயற்கைத் தாவர பண்டசாலையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வஸ்துக்களால் செய்யப்பட்டிருக்கிறபடியால் இது யாதொரு கெடுதியும் செய்யாமல் பூரண சுகத்தைத் தரக்கூடியது. உயர்தரமான பல வஸ்துக்களிலிருந்து இதை தேர்ந்தெடுப்பதில் உண்டான திரவிய செலவுகள், ஓர் பொருட்டாய் எண்ணப்படாமல் சர்வரோக பரிகாரியாயிருக்கும்படி மிகவும் பிரயாசையோடு முடிக்கப்பட்டுள்ளது. இத்தைலத்தின் மேன்மை அது தரும் சுகத்தினாலேயே அநேககால அனுபவத்தினால் மதிப்பிடப்பட்டு தற்போது எல்லாராலும் உபயோகிக்கப்படக் கூடிய "வீட்டு மருந்தாய்" உலாவிவருகிறது. திடீரென்று உண்டாக்கக் கூடிய தலைவலி, முகஜன்னி, கைகால் பிடிப்பு, சுளுக்கு, வீக்கம் இருமல், ஜலதோஷம், பல்வலி, காயம், பூச்சிக்கடி, விஷம், மார்வலி இடுப்புவலி, முகம்பரு, உஷ்ணத்தினால் தேகத்தில் எழும்பும் பொறிகள், முதலிய வியாதிகளுக்கு இத்தைலமானது சங்காரியாயிருப்பதால் ஒவ்வொரு வீட்டிலும் இது அவசியம் இருக்கவேண்டியது.

இதனை ஒருமுறை உபயோகப்படுத்திப்பார்க்கும் பட்சத்தில் இதையே உபயோகிக்க மனம் நாடும். சீக்கிரமாகவும் முழுமையாகவும் சுகந்தருவதில் இந்த "ஸுகாஞ்சனத்தின்" முன் நிற்கக்கூடிய வேறு தைலம் கிடையாது.

உபயோகிக்கும் முறை:—இந்த ஸுகாஞ்சனத்தில் சிறிது எடுத்து நோயுள்ளவிடத்தில் தேய்க்கவேண்டியதே, உடனே சுகங் காணும்.

புட்டி ஒன்றுக்கு 0—8—0

சுகாஞ்சன் பர்மாசி
கீல்பாக் மதராஸ்

## குடும்ப வைத்தியம்.

வைத்தியசாஸ்திரம் கற்பதற்கு முன் தெரிந்துகொள்ளவேண்டிய சில முக்கியவிஷயங்கள். அதாவது எந்தெந்த சாஸ்திரங்கள் என்னென்ன விஷயங்களைத் தெரிவிக்கின்றன என்பதும், அவைகளின் நாமங்களையும் முதல் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும்.

(1) குணபாடம் [Materia Medica] இது நோய்களைவிலக்க உள்ளும் புறமும் உபயோகிக்கும் அவுஷதங்களைப்பற்றி விவரிக்கும். இதில் எல்லாபதார்த்தங்களின் குணம் - உபயோகம், நன்மை தீமை (அதாவது தோஷம்.) மருந்தை கொடுக்க வேண்டிய அளவு, கொடுக்கும்விதம், அனுபானம் முதலியவைகளை விஸ்தாரமாகச் சொல்லப்படும். இதற்கு இங்லீஷில் [மெடீரியா மெடிகா] என்று பெயர்.

வாகடவிதி. இது அவுஷதங்களை தயார்செய்யும் விவரங்களைப் பற்றிசொல்லும். இதற்கு இங்லீஷில் [Pharmacopocha.] பார்மகோபியா என்று பெயர்.

பதார்த்த சாரநூல். இதானது இன்னின்ன மருந்து இன்ன வியாதிகளைக் கண்டிக்கும் என்று விவரிக்கும். இதற்கு இங்லீஷில் [Therapeutics.] திராபிடிக்ஸ் என்று பெயர்.

(2) நாபி, எட்டிக்கொட்டை, பாஷாணம், வீரம், பூரம், ரசம், கஞ்சா, அபினி, முதலிய விஷமிக்கும் பதார்த்தங்களையுடைய புட்டிகளின் பேரிலும் இவைகள் சேர்ந்திருக்கும் மருந்துகளையுடை புட்டிகளின் பேரிலும் விஷம், என்று ஓர் கடுதாசித்துண்டில் எழுதி அதன்கீழ் மருந்தின்பெயரையும் அதில் சேர்ந்திருக்கும் விஷமிக்கும் வஸ்துவின் பெயரும் 1 மாத்திரையில் அது சேர்ந்திருக்கும் அளவும் இன்னசாஸ்திரம் இன்னபக்கத்தில் இன்னஇடத்தில் சொல்லப்பட்டதென்றும் இவ்வளவுவிவரங்களும் அத்துண்டிலெழுதி பிரதி சீசாவின்பேரிலும் ஒட்டிவைப்பதுடன் அந்த மருந்து செய்து முடித்த வருஷம் மாசம் தேதிகளையும் குறிப்பிடவேண்டும். அப்படி செய்யாதபக்ஷத்தில் சில சமயங்களில் அநேகவைத்தியருக்கு சந்தேகமுண்டாகக்கூடும். அப்படி சந்தேகமுண்டானால் சற்றும் ஆலோசிக்காது பூமியில் குழிதோண்டி உடனே புதைத்துவிடவேண்டியது.

(3) நாள்பட்ட மருந்துகளை பரீக்ஷித்து குணம் கெட்டுப்போயிருந்தால் அவ்விதமே புதைக்கவேண்டியது.

(4) வெளிச்சமும் காற்றும் பட்டால் உடனே தமதுகுணமும் நீங்கும் கெட்டுப்போகிற அவுஷதங்கள் பலஉண்டு இவ்வித மருந்துகள் ஆயுர்வேதத்தில் ஏதோ சிலவாயினும் மேல்நாட்டு மருந்துகள் பலஉண்டு. அப்பேர்ப்பட்டவைகளை நீல நிறமுடைய சீசாக்களில் போட்டு கல்சார்க்கு போட்டு காற்றும் வெளிச்சமு மில்லாவிடத்தில் வைக்கவேண்டும். நீலநிறசீசா கிடைக்காவிட்டால் வெள்ளை சீசாவிலேயே போட்டு சீசாவின்மேலே முழுதும் நீலநிறமான கடிதத்தை ஒட்டிவைக்கலாம். கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம்.

(5) சரீரஸ்பாவம்.—வியாதியஸ்தனுக்கு மருந்து கொடுப்பதற்குமுந்தியே அவன்வயது, நாடி, மல மூத்திர விசர்ஜ்ஜனக்கிரமமும் சுவபாவமாய் எந்தேதிகளென்றும் மற்றகுறிகளையும் பரீக்ஷித்து ரோகத்தையும் ரோகியின் சரீரசுவபாவத்தையும் தெரிந்துகொண்டு பிறகு அவைகளுக்குத்தகுந்தபடியே மருந்தை உபயோகிக்கவேண்டியது. ஏனெனில் சரீரமாறுபாடுகள் பலவிதமுண்டு. சிலருக்கு பேதியாவதற்கு அவுஷதம் கொடுத்தால் முதலே வழக்கம்போல் போவதும்கூட போகாமல் கட்டிவிடுவதும் சிலருக்கு மலம்கட்டத் தகுந்த அவுஷதங்களைக்கொடுத்தால் விசேஷ பேதியாவதும் விசேஷவீரியமுள்ள அவுஷதங்கள் வேலைசெய்யாமற்போவதும், சொல்ப குணமுடையவைகள், விசேஷ நன்மைகளைப்பயக்குவதும், சிலருக்கு உஷ்ணிக்கவேண்டிய மருந்துகள் சீதளிப்பதும், சீதளிக்கவேண்டியவைகள் உஷ்ணிப்பதும் இவ்விதம் பலவித தேகக்கூறுபாடுகளிருப்பதால் அவைகளையெல்லாம் ஆராய்ந்து யோசித்தும் வியாதியஸ்தன் வாய்மூலமாயறிந்தும் தெரிந்துகொண்டபிறகு அவுஷதம் கொடுக்கவேண்டும். ஒவ்வொருமருந்தையும் கொடுக்கவேண்டிய பிறமாணம் முதலியவைகள் அந்தந்தசாஸ்திரங்களில் விவரித்திருக்கும்; அவைகள் பெரியவர்களுக்கா ஸ்திரீகளுக்கா சிறு குழந்தைகளுக்காவென்றும் அசிரத்தை சோம்பேரித்தனம் முதலியவைகளும் துணிச்சலுமின்றி சாஸ்திரத்தை செவ்வையாய் பரிசோதித்து, அதில் கண்ட அளவிற்கு குறைத்தே கொடுக்கவேண்டும். ஏனெனில் அச்சாஸ்திரங்கள் இக்காலத்தியதல்ல வெகுகாலத்திற்குமுந்தி ஏற்பட்



டவைகள். அக்காலத்திய மானிடர்களின் வலிவிற்கும் இக்காலத்திய மானிடரின் வலிவிற்கும் விசேஷ பேதமுண்டு. ஆதலால் அவுஷதம் ஆரம்பிக்கும்போதே குறைந்த அளவில்கொடுத்து பிறகு தினேதினே அதிகப்படுத்தலாமேயொழிய ஆரம்பத்திலேயே நிலை தெரியாமல் அவசரப்பட்டு அதிகம் கொடுக்கலாகாது.

(6) நமது தேசத்தில் ஸ்திரீகளும், புருஷர்களும், மருந்தை அதிகஅளவுசாப்பிட்டால் சீக்கிரத்தில் வியாதிநீங்குமென்றுநினைத்து சூரணம் எண்ணை லேஹியம் கஷாயம் முதலியவைகளை அதிக அளவில் கொடுப்பதினால் சிலதேகங்களுக்கு ஒவ்வியும் சில சமயங்களில் ஒவ்வாமலும் பல கெடுதிகள் நேரிடுகின்றன இவ்விதம் செய்வது அறியாமைத்தனமேயொழிய வேறல்ல.

(7) அபினி, கோர்வாளம், வாந்திபுட்பு, நாபி, ஊமத்தன்விரை, மருட்டிமொக்கு, கெஞ்சா, முதலிய விகடிக்கக்கூடிய வஸ்துக்கள் சேர்ந்த மருந்துகளை குழந்தைகளுக்கு கொடுக்கலாகாது. ஒருவேளை அவசியம் கொடுக்கவேண்டி நேர்ந்தால் அளவறிந்து வெகுசாக்கிரதையாய் பிரயோகிக்கவேண்டும். குழந்தைகளுக்கு அபினி சேர்ந்த மருந்தை கொடுக்கலாகாது ரசம்சேர்ந்த மருந்துகளைக்கொடுக்கலாம். அதுகுழந்தைகளுக்கு யாதொருகெடுதியும் செய்யாது. ஏனெனில் முலைப்பாலானது ரசத்தின் வேகத்தையும் தீக்குணத்தையும் போக்கும் சக்தியுடையது. முலைப்பாலுண்ணும் குழந்தைகளுக்கு ரசம் பூரம் சம்மந்தமருந்துகள் நன்மைசெய்யுமே யொழிய யாதொரு கெடுதலும் செய்யாது. (அந்தவிதி முலையுண்ணும் குழந்தைகளுக்குமாத்திரம்தான்).

(8) புருஷர்களுக்கு 1 பங்கும் ஸ்ரீகளுக்கு முக்கால்பங்கும் குழந்தைகளுக்கு அரை, கால், அரிக்கால், பங்கும், முறையேவயது பலத்திற்குத்தகுந்தாப்போல் குறைத்தே கொடுக்கவேண்டும்.

(9) கர்ப்பஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் பால்கொடுக்கும் ஸ்திரீகளுக்கும், மாதவிடாயாயிருக்கும் ஸ்திரீகளுக்கும் கோர்வாளம் முதலாகிய உஷ்ணகுணமுள்ள மருந்துகளை கொடுக்கக்கூடாது.

## சரீரசுவபாவம்.

சரீரஸ்வபாவமானது ஆயுர்வேதபண்டிதர்கள் மூன்றுவிதமெனவும், மேல்நாட்டு வைத்தியர்கள் 4 விதமென்றும், சொல்லுகிறார்கள். இவ்விருவகைகளில் மேல்நாட்டுவைத்தியர்கள்சொல்லும் வகையாவன:—(1) ஸாங்குவின் [**Sanguine.**] (2) பிளக்மாடிக். [**Plegmatic.**] (3) பிலியஸ். [**Bilious.**] (4) நெர்வஸ். [**Nervous.**] என்பன.

### இவைகளின்விவரம்.

(1) சாங்குவின் சரீரியின் ஸ்வபாவகுணக்குறிகளாவது இந்த தேகியின் நாடி அதிவிரைவாய்நடந்தால், விசேஷகோபமுண்டாதல் காமக்குரோத லோப மோஹ மதமாச்சரியங்கள் விசேஷித்திருத்தல், சாதாரணமாய் இத்தேகிக்கு அடிக்கடி சுரம் பித்தசம்பந்த ரோகங்கள் அதிகபித்தமும் இரத்தம்அதிகரித்தலுமாயிருக்கும்.

(2) பிலியஸ் சரீரியின் ஸ்வபாவகுணமாவது எவ்விதகஷ்டசாரியங்களையும் சாதிக்கிர மனோதைரியம், துணிச்சல், திடசரீரம் இவைகளையுடைதாயிருப்பதோடு இந்ததேகியை பித்தம் அக்னிமாந்தியம், முதலியபிணிகள் தொடர்ந்திருக்கும்.

(3)நெர்வஸ் சரீரியின் ஸ்வபாவகுணம், இந்த தேகி துர்பலனாயும், நல்லசகவாசம் சன்மார்க்கத்திலிச்சை அதிகபயம், துர்பல நாடி முதலிய குணங்களும், இந்ததேகியை இசிவு சன்னிரோகம், பித்தரோகம் முதலானவை தொடர்ந்திருக்கும்.

(4) பிளக்மாடிக் சரீரஸ்வபாவத்தின் குறியாவது :—இந்த தேகியின்நாடி மந்தமாய் நடத்தல், பலஹீனம், கைகால் அசந்திபுத்திமந்தம், சரீரத்தளர்ச்சி, முதலியகுணங்களும், நீர்க்கோவை பாண்டு சோகை காமாலை கண்டமாலை முதலியரோகங்கள் தொடர்ந்திருக்கும்.

### ஆயுர்வேத வைத்தியர்களின் அப்பிபிராயம்:

வாதம், பித்தம், சிலேத்மமென மூவித தேகிகளுண்டென்பது.

(1) வாததேகிலக்ஷணம்:—வாததேகிக்குப் பித்தமும் கபமும் குறைந்து வாதம் அதிகமாயிருப்பதுமன்றி மெலிந்து உயர்ந்ததேகமும், பருத்த அடித்தொடையும் நடந்தால் கீல்கள் நெட்டை ஒடிதலும் கடித்த இமைகளுடன் வட்டமாக விசாலித்துச் சாக்கண்



போன்று சுரசுரப்பாகிச் சிறிது வெண்மைகலந்த நேத்திரங்களும் குளிர்ந்தபார்வையும், கொஞ்சம் கருமை வெண்மை கலந்த சரீரச்சாயையும், கறுத்துமுனைபிளப்புகளுள்ள தலைமயிரும் சிலசமயம் தெளிவாயும் சிலசமயம் மனசஞ்சலத்தால் தடுமாற்றமான வார்த்தையும், தித்திப்பு புளிப்பு உப்பு சூடு முதலிய வஸ்துக்களிற் சொல்ப இச்சையும், சீதளவஸ்துவில் வெறுப்பும், விசேஷபோஜனமும், மாதர்களிடம் சொல்பஇச்சையும், வீரியக்குறைவும் சந்தானவிர்த்தியும், தைரியம், புத்தி, அறிவு, இவை நிலையின்மையும் ஜலவிலாசம், சங்கீதம் அகஸ்சியம் வேட்டை முதலியவைகளில் இச்சையும் அயோக்கியதை மதமாச்சரியம் காமக்குரோத லோபங்கள் பொன் பொருள் முதலியவைகளை அபகரிக்கநினைப்பு, முதலிய குணங்களும், கீர்த்தியின்மையும் சொல்பநித்திரையும் நித்திரையில் ஆகாயம், மலை, வனம், முதலியவைகளில் தான் சஞ்சரிப்பதாகவும், கனவுகாண்டலும், கவிசெய்யும் தன்மையும் உண்டாயிருக்கும்.

(2) பித்ததேகியின் லக்ஷணம்:—இந்ததேகிக்குப் பித்தம் அதிகமாயிருப்பதுமன்றி அஸ்திகளிலும், கீல்களிலும் சதைகுறைந்து எப்போதும், வெப்பம், வியர்வை, அற்பதுர்க்கந்தம், சருமம் சுருங்கித்திரைதல், முதலானவை, பொருந்திய, மேனியும், மஞ்சள், சிவப்பு கலந்த, நிறமும், முகம், உள்ளங்கை, உள்ளங்கால் சிவப்பும், சிறுத்து மஞ்சள்வன்னம்பெற்றும், அதிசஞ்சரிப்பும், மெல்லியஇமைகளுமுடையனவயாய், வெய்யில், பசி, கோபம், மதுபானம், இவைகளால், அதிவிரைவில் சிவக்கின்றகண்களும், தலையிர் கொஞ்சம் மஞ்சள் வன்னரோமமும், தேகத்தில் சொற்பரோமமும், நரையும், முகப்பருவுடன், கறுத்த மச்சங்களும், தித்திப்பு, துவர்ப்பு, கசப்பு, சீதளம் என்று மிவைகளுள்ள பதார்த்தத்திலிஷ்டமும், அற்பவுண்டியும், பசி, தாகம், சோபம், உஷ்ணம், கிலேசம், ஆகிய, இவைகளைச் சகிக்காத தன்மையும், சுகந்தமாலை பூச்சுமுதலிய, அலங்காரத்திலும் பனியிலும், குளிர்ச்சியிலும் விருப்பமும், அற்பசுக்கிலமும், அற்பகாமம் ஸ்திரீகளிடத்தில் சொல்பஇச்சை, வீரம், பணிகளுக்கு, அஞ்சாமை, துணிவு, மானம், துணிச்சல், பராக்கிரமம், தெளிவான புத்திசூக்ஷ்மம் விசேஷவார்த்தை, ஆசாரம், நல்நடத்தை, தன்னைகிட்டியவரிடம் பக்ஷம், பசாதாபம், முதலியகுணங்களும், நித்திரையில், சிவந்தபுட்பங்கள், கொங்கு, சரக்கொன்றை, முருக்கன், முதலிய சிவந்தபுட்ப

முடைய மரங்களையும், மின்னல், சூரியன், நெருப்புகாலாபக்கத்திலும் பற்றி எரிகின்ற வெளிச்சம் சிவந்தமானம், செம்பூமி, மற்றும்இவைகளைப்போன்ற சொற்பனங்களும், திருப்தியான போகமும், வித்தையும், கவிதா சாமர்த்தியமும்கூட உண்டாயிருக்கும். இவனுக்கு முற்காற்பலமும், 66 வயதுமுடையவனாகவும், இருப்பான். இதன்றியும், புலி, கரடி, குரங்கு, பூனை, பாம்பு, யக்ஷர்கள், கின்னரர்கள் முதலியவர்களுக்கும், அக்னிபாலுற்பத்தியாகிற ஜந்துகளுக்கெல்லாம்பித்ததேகமென்றே ஆயுர்வேதவைத்திய சாஸ்திரசம்மதம்.

(3)சிலேத்மதேகிலக்ஷணம்:—சிலேத்மதேகிக்கு, கபம்அதிகமாயிருப்பதுமன்றி, நீக்கமற்ற, நாம்புகளும், அஸ்திகளும், கீல்களும், தசைகளும், நிறைந்து, மேடுபள்ளமில்லாமல், மிருதுவுடனழகியதேகமும் பரந்த நெற்றியும், அகன்று, உயர்ந்தமார்பும், முழங்கால்வரையில் நீண்டகைகளும், குறைவில்லாத, அவயவங்களும், அகன்று, நீண்டு நுனிசிவந்தகருவிழி, வெள்விழி, ஒளிவாய் தெளிவாய் தூரப்பார்வை தோன்றுவதாய்ச் சுற்றிலுஞ்சூழ்ந்து நெருங்கிய இமைமயிருடன் எண்ணெதடவியதுபோல் மினுமினுத்து அழகியகண்களும், மஞ்சள் சோளம், பாணத்து ஒளி, கத்தியொளி, கோரோசனை, தாமரைபூ, பொன்என்னும் இதையொத்த சரீரநிறமும், சிலேஷ்மபசையால் மிகவும்கறுத்து, நெருங்கி முளைத்தரோமமும், மதத்தயானை நடையும் மேகம், கடல் சிங்கம், மத்தளம் முதலியவைகளின்ஒலிபோன்ற கண்டதொனியும், இன்னும் உஷ்ணபதார்த்தங்கள் கூடிய அற்பவுண்டியும், அதிகமாம் பலமும் தூக்கம், சிலேஷ்மஉஷ்ணம் ஆகிய இவைகட்கு, பின்வாங்காததன்மையும், ரசதாது, சுக்கிலதாது, சந்தானம், பரிசனம், நடை, புத்தி ஆகிய அவைகளின் பெருக்கமும் வாலிபத்தில் அதிகோபமும், கடுஞ்சொல், சஞ்சலபுத்தி தீர்கவயிரம் அதிவிஷபம், அதிதாகம், என்னும், இவையின்மையும், சத்துவகுணம் ஞாபகசக்தி, மேலானபுத்தி, முன்யோசனை பெரியோர்கன்பு செய்யும்பக்தி, வணக்கம் நீங்காசினேகம், நம்பிக்கை சத்தியம் பிரதிக்ஞை, பெறுமை நாணம் பொறுமையானசுபத்தில் தருமத்திலிச்சை நன்றிமறவாமை ஈகை ஒருவேளை மிகுந்த ஈகை பிறர் நன்குமதித்தல் நற்செய்கை என்னுமிக்குணங்களும் சுகநித்திரையும் இந்தநித்திரையில் பக்ஷிகளுள்ள தாமரைகுளம் சீதளமேகம் என்னுமிவைகளைக் காணுகின்ற கனவும், கவித்வம் செய்கின்ற தன்மையுடன் மிகுந்த செல்வமும் உண்டாயிருக்கும்.



இதன்றியும் தேவர்களில் பிரம்மன், உருத்திரன், இந்திரன், வருணன்என்னுமிவர்களுக்கும், மிருகங்களில் சிங்கம்-யானை-குதிரை பசு-எருதும்- கருடர்-அன்னம்-என்னும் இவைகளுக்கும் முற்கூறிய விழிகளும் குணங்களும் தேகமும் உண்டாயிருக்கும். சிலேஷ்மமென்பதைச் சந்திர சொரூபமென்றே சொல்கிறார்கள். மேற்கூறியவாததேகி, பித்ததேகி, சிலேஷ்மதேகி, என்னும் இம்மூன்று தேகிகட்கும் பொதுவாக சுத்ததேகிகளென்றேபேர். தொந்ததேகிகட்கு மேற்கூறிய குணங்களெல்லாம் மாறுபட்டிருக்கும். மேல்சொன்ன விஷயங்கள்யாவும் அந்ததேகிகட்கு சாதாரணமாயுள்ளபோது வுள்ள குணங்களாம். மற்றவிவரங்கள் பின்னால் அஷ்டவித பரீக்ஷைகள் என்பதில் விவரமாய் எழுதுவோம் முக்கியமாய் வாததேகிக்கு வாதநாடியும் பித்த தேகிக்கு பித்தநாடியும், சிலேத்மதேகிக்கு சிலேத்மநாடியும் அதிகரித்து நடக்கும். இந்தமூன்றுநாடிகளில் முதல் விரலின் கீழ் அடித்துக்கொள்ளுவது வாதநாடி, இரண்டாவது விரலின்கீழ் அடித்துக்கொள்ளுவது பித்தநாடி. மூன்றாவது விரலின்கீழ் அடித்துக்கொள்ளுவது சிலேத்மநாடி இம்மூன்று நாடிகளும் ஒன்றையொன்று பற்றிநடப்பதும்உண்டு. அதுவே தொந்தநாடிஎன்பார்.

## நாடி.

நாடிஎன்றால் என்ன? என்பதைப் பற்றியவிவரங்களை இங்குகாண வேண்டியதுஅவசியம். பிறிதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்றும் பஞ்சபூதங்களாலுண்டாகிய சரீரங்கள் இப்பஞ்சபூதங்களின் அம்சங்களாகிய வஸ்துக்களை உண்டே உயிர்பிழைத்து சஞ்சரிக்கின்றது. நாம் உண்ணும் சகலபதார்த்தங்களும் பஞ்சபூதங்களின் அம்சங்களையுடையவைகள். இந்து வைத்தியசாஸ்திரங்களில் பஞ்சபூதங்களென்றும், யூனானிவைத்திய சாஸ்திரங்களில் பஞ்சபூதங்களில் ஐந்தாவதாகிய ஆகாயம் என்பதற்கு ரூபமின்மையாலும் அது மிஞ்சிய நான்குபூதங்களுடனேயே சேர்ந்துவிடுவதாலும் நான்கு பூதங்களெனவே தீர்மானிக்கின்றார்கள். எப்படியாயினும் ஐந்துபூதங்களுண்டென்பது நமது சித்தாந்தம். இவ்வுலகில் தோன்றும் தாதுதாவர ஜீவன்கள் முதலியவற்றின் சமுதாயபெயரையே நாம்பூதம் என்கிறோம். இப்பூதங்கள் பலகுணமுடையவைகள்.

பிரிதிவி:- மண்ணின் அம்சம் குளிர்ச்சியும் வரட்சியும், அப்பு- ஜலத்தின் அம்சம், குளிர்ச்சியும் கொழுமையும், தேயு- அக்னியின் அம்சம் சூடும் வரட்சியும் வாயு- காற்றின் அம்சம், சூடுங்கொழுமையும் ஆகாயம் - நிர்மல அம்சம், சூடு குளிர்ச்சி வரட்சி கொழுமை முதலியவத்தக்குறைச்சலின்றி சமகுணமுடையது.

இவ்வித ஸ்வபாவகுணங்களையுடைய வஸ்துக்களை அருந்துவதால் அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து அவைகளில் வலிவுமிகுந்தவை அதனதனின் குணங்களைமிகுந்துக்கொடுக்கும். இதற்கே பூதகுணங்கள் என்று சொல்லுவர். உண்ணும்ஆகாரங்கள்குடலின் வழியாய் இரைப்பையைச்சேர்ந்து அதன்சக்தியால் இதன்ரூபம் மாறி ஜலரூபமாகும். அதில் முக்கியமாகிய ரசம் போக மற்றபாகமாகிய அசத்துக்கே மலமெனப்படும், அசத்தாகிய மலம்போக நின்ற ரசத்திற்கே சத்தெனப்படும். ஆதலால் இரைப்பையில் பக்குவப்பட்டஅன்னரசத்திற்கே சத்தென்றும், சாரம் என்றும் நாம் வழங்குகிறோம்.

இப்பூதகுணங்கள் சிலபதார்த்தங்களில் ஒன்றிற்கொன்றுகுறைந்தும் அதிகரித்துமிருப்பதால் எப்பதார்த்தத்தில் எப்பூதத்தின் குணம் அதிகரித்திருக்குமோ அப்பதார்த்தம் அப்பூதகுணமுடையதென சொல்லப்படும். முக்கியமாப் அப்புவின் குணமதிகரித்ததற்கு சீதளவஸ்துஎன்றும், தேயுவின்குணம் அதிகரித்ததற்கு சூடானவஸ்து அல்லது உஷ்ணகாரி என்றும், வாயுவின் குணம் அதிகரித்ததற்கு வாயுபதார்த்தம் அல்லது வாதகாரிஎன்றும், சமமாகியகுணமுடையதாகிய ஆகாசத்தின்குணமுடையதாகிய வஸ்துவுக்கு இரக்தம் அல்லது தாதுவிற்றி பதார்த்தமென்றும் சொல்லுகிறோம்.

மழை வெள்ளமானது எப்படி பள்ளத்தில் போய் விழுந்தவுடன் கலங்கலாகஇருந்து மறுபடி அடியில் வண்டலும் மத்தியில் சற்று கலங்கலான தடித்தஜலமும்அதன்மேல் தெளிவும் அதன்மேல்தூசி தும்புகளும், நுரையுமாய் தோன்றுகின்றனவோ அவ்விதமே குடலில் சத்தாய்மாறிய அன்னரசமானது மறுபடியும் ஈரலில்போய் சுத்தம்பண்ணப்பட்ட போது அடியிற்படிந்திருக்கும் வண்டலுக்கு வாதமென்றும், அதன்மேல்நிற்கும் கலங்கல்வஸ்துவிற்கு கபமென்றும், அதன்மேல் நிற்கும் தெளிந்தவஸ்துவிற்கு இறத்தமென்றும்



மேலேநுரைத்தெழுந்த வஸ்துவிற்கு பித்தமென்றும் பெயர்படும்; இச்சடலத்திற்கு நான்கு சத்துகளும் அவசியமாயினும், முக்கியமானது இரத்தம் இரண்டாவது வாதம், 3 பித்தம், 4வது சிலேத்மம்.

இந்த அன்னரசமானது சிறுகுடல் மார்க்கமாய்ச் செல்லும் போது ரசாயனிகள் இதைகிரகித்து ரசதாரைக்குக் கொண்டுபோம். அங்கிருந்து அதுமேலுக்கேறி இடதுபுஜ நாளத்தில்வீழ்ந்து கெட்ட இரத்தத்துடன் கலந்து பெருநாளங்களின் வழியாய் இருதயத்துள் வலதுசிரவத்திற்கு வரும். அங்கிருந்து வலதுசடாத்தில்இறங்கும். அங்கிருந்து புப்புசநாடி வழியாய்ச்சுவாசப்பைக்குட்செல்லும். அங்குநாம் சுவாசிக்கும் பரிசுத்தமாகிய பிராணவாயுவினால் அதன்தோஷம் நீங்கி நல்ல ரத்தமாய் மாறுகிறது. பிறகு புப்புசநாளங்கள் வழியாய் இதயத்தின் இடதுசிரவத்திற்கு வந்துசேரும். அங்கிருந்து மருபடியும் பெருநாடிவழியாய் சென்று உடலெங்கும் சர்வாவயத்திலும் சிருநரம்புகளிலும் வியாபித்து போஷிக்கும். இவ்விதம் பரவும் போது கெட்டுப்போன ரக்தமானது மருபடியும் முன்சொன்னதுபோல் இருதயத்திற்குவரும் இம்மாதிரி சதாகாலமும் திரேகமெங்கும் சுற்றிக்கொண்டே தேகத்தை போஷிக்கும்.

இரத்தமானது தேகபோஷாக்குச்கு எவ்வளவாக நிற்கவேண்டுமோ அவ்விதம்பால்லியத்தில் அதிகமாகவும் யௌவனத்தில் சமமாகவும் விருத்தாப்பியத்தில் குறைவாயும்உற்பத்தியாகி எச்சமயத்திலும் சர்வாங்கத்தையும் போஷித்துவருவதால் நமதுதேகத்திற்கு இரத்தமே மூலாதாரமாகும். மற்றசத்துக்கள் இதற்கு உபபலங்களாம். இந்தரத்தமானது சதைகளிலமைந்துள்ள நரம்புகளின்வழியாய் திரேகமாத்தியந்தமும் பறவுகிறது. இரத்தம் செல்லும் குழல்களுக்குத்தான் நரம்புகள் என்றுபெயர். இதற்கே நாடிகள் என்றும் பெயர்.

## நாடி நிதானமும் அதை பரிக்ஷிக்கும் விதமும்.

இந்தநாடிகளில் இரத்தம் ஒரே மிதமாய்ஓடும். அப்படிஇருக்கிறதினால் அதைமூன்று விரல்களினால் சமனாய் அழுத்தினால் மூன்று விரல்களுக்கும் ஒரேகிரமமாய் ஏககாலத்தில் தட்டுப்படவேண்டியது. ஆனால் விரல்கள் நீளத்தினால் வித்தியாசப்படும். நாடி நரம்புகளானது ஓரிடத்தில் சதைக்குமேலாகவும், சில இடங்களில் சதைக்குள் அழுந்தியும் இருப்பதால், அடித்துக்கொள்ளும் விசையில் வேறுபாடுகள் தோன்றும். இந்த வேருபாடுகளுக்கே வாதம், பித்தம், சிலேத்துமம் என்பர். இதனால் நாடியைப் பரிக்ஷித்து நோய் இன்னதென்று அரிந்து கொள்வது சாஸ்திர ஆராச்சியுருக்கும் வெகுகால அனுபவசாலிகளுக்கும் சாத்தியமே யொழிய சகலருக்கும் அசாத்தியம். நாடிநடையின் வேறு பாடுகளை அறிவது மிகவும் பிரயாசம்: ஏனெனில் இந்த நடையை அன்னம், ஆமை, அட்டை, கோழி, ஒணான்- காக்கை, மையில், பாம்பு- தவளை, முதலியவைகளின் நடைக்கு ஒப்பிட்டு இருப்பதால் அவைகள் சில சமயம் விசையாயும், சிலசமயம், ரொம்பவும் மந்தமாயும் சிலசமயம் சமமாயும் நடக்கலாம். ஆதலால் இவைகளை மிகவும் பிரயாசைப்பட்டு வெகுகால அனுபவத்தின்பேரில்தான் கண்டுகொள்ளக்கூடும். இதற்காகவே அஷ்டவித பரிசைஷகளை எழுதி இருக்கிரார்கள். அதுவும் சிலசமயம் கஷ்டசாத்தியமாகிரது. இப்படிஇருக்க மேல்நாட்டு வைத்தியர்கள் ஓர்விதமாய் நாடிநடையை கண்டுபிடித்திருக்கிரார்கள்:

அதாவது புருஷன் ஆரோக்கியமாயிருக்கும்போது அவனது நாடி 1 நிமிஷத்திற்கு 70, 75 தரம் அடித்துக்கொள்ளும் இதற்கு கிரமநாடி [**Regular pulse.** ரெகுலர்பல்ஸ்] என்றுபேர். இந்த அளவுக்கு அதிகமாய் அடித்துக்கொண்டால் [பிரீக்வெண்ட்பல்ஸ்] [**Frequent pulse.**] படபடத்த நாடிஎன்றும், குறைந்து அடித்துக்கொண்டால் [**Slow pulse.** ஸ்லோபல்ஸ்] மந்தநாடிஎன்றும், அழுத்திப்பார்க்கிர விரல்களில் படுகிற நாடியின்விசை சுருக்காயிருந்தால் [**Quick pulse.** குவிக்பல்ஸ்] தீவிரநாடிஎன்றும், ரத்தம் நிரைந்துஓடும்நரம்பு பெருத்திருக்குமாதலால் அதை[**Full pulse**] [புல்பல்ஸ்] பூரணநாடிஎன்றும், ரக்தம் குரைந்து ஓடுவதால் நாடிசுஷ்கித்திருந்தால் இதற்கு [**Small pulse** ஸ்மால்பல்ஸ்] சுஷ்கநாடி என்றும் பெயர்படும். இந்தநாடிகள் தீக்ஷண்ணிய வியாதிகளில் மிகவும் படபடத்து தீவிரமாயும், இரத்தக்ஷீணரோகங்களில் மிகவும் மந்தமாயும் நடக்கும்.



## நாடியை பரிக்ஷிக்கும் விதமும், ஸ்தானங்களும்.

நாடியை பரிக்ஷிக்கும் ஸ்தானங்களாவது:—(1)கை. (2)கண்டம் (3) கன்னசுழி. (4) காலின்பெருவிரல். (5) கணுக்கால். முதலிய வைகளையும் பரிக்ஷிக்கலாம்; இருதயநடைக்கு நாடி நடை ஒத்திருப்பதால் திரேகத்திலுள்ள ரோகங்களை இருதயம்அரிந்து நாடி நரம்புகளை விரித்தும் சுருக்கியும், நாடிகளை நடப்பிக்கின்றது.

நாடிபரிக்ஷிக்கும் விதங்கள்:—ரோகியின்கையின் கட்டைவிரல் என்னும் பெருவிரல்பக்கமாய் மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் மேலாக வைத்தியரின் ஆள்காட்டிவிரல்முதலாக மூன்றுவிரல்களால் அழுத்தியும், சமமாயும், தளர்த்தியும் பாக்கும்போது நாடி நடை ஏற்படும். புருஷர்களுக்கானால் வலதுகையிலும் ஸ்திரீகளுக்கு இடதுகையிலும் நாடிபார்ப்பது முக்கியம். இறண்டுகைகளிலும் பரிக்ஷிக்கலாம். ஆள்காட்டிவிரலில் படும்நாடிக்கு வாதம்என்றும், அதற்கடுத்த நடுவிரலில் படும்நாடிக்கு பித்தமென்றும், அதற்கடுத்த விரலில்படும் நாடிக்கு சிலேத்மமென்றும், அரியவேண்டும். இதில் எந்தெந்த விரல்களில் நாடி நடை அதிகமாயும் பலமாயும் அடிக்குமோ அந்த அளவிற்குத் தகுந்தாப்போல் மேல்கண்ட திரிதோஷங்களிருக்குமென்று அரியவும்.

## திருட சரீரிகளின் நாடீ நிதானமும், ஒருநிமிஷத்தில் நாடி நடக்கும்அளவும்.

யாதொருரோகமின்றி சரீர சௌக்கியமாயுள்ளவர்களுடைய சரீரத்தில் வாதம் 4 பங்கும் பித்தம் 2 பங்கும் சிலேஷ்மம் 1 பங்குமிருக்கும். இப்படியிருந்தால் ரோகமில்லை. மற்றும் மேல்நாட்டு வைத்தியர்கள் கண்டுபிடித்தவிதமாய், "ஸ்தெதஸ்கோப்" என்னும் சுவாசாசயஸ்திதியை யுணர்த்தும் கருவியினால் பார்த்தால் அடியில் கண்டவிதமாய் நாடி நடக்கும் இதேஅளவிற்கு கைநாடியிலும் காணலாம். ஆனால் நோயாளி நிற்கும்போது நாடி பரிக்ஷிக்கலாகாது.

ஒருநிமிஷத்திற்கு நாடிநடக்கும் அளவு.

| | | |
|---|---|---|
| குழந்தை பிறந்தவுடன் | ... 140—130 | அடிகள் |
| முதல்வருஷத்தில் | ... 130—115 | ,, |
| 2 வருஷத்தில் | ... 115—100 | ,, |
| 3 வருஷத்தில் | ... 100— 90 | ,, |
| 7 வருஷத்திற்குமேல் | ... 90— 85 | ,, |
| 14 வருஷத்திற்குமேல் | ... 85— 80 | ,, |
| சம்பூரண புருஷனுக்கு | ... 75— 70 | ,, |
| க்ஷீணபருவத்தில் | ... 70— 75 | ,, |

நாடிநடையானது அவாளவாள் சக்திக்கும், உழைப்பிற்கும் திரேகபலத்திற்கும் தகுந்தாப்போல் நடக்கும். ஆடல் பாடல், ஓடுதல், சிரமமாய்வேலைசெய்தல் முதலாகிய பெருமூச்சுவாங்கும்சமயங்களில் சாதாரணமாயுள்ளதைவிட, சற்று அதிகமாய் படபடத்து நடக்கும். அச்சமயங்களில் சம்பூர்ணவயதுடைய சுக சரீரிக்கி நிமிஷத்திற்கு 110 முதல் 130 தடவைஅடிக்கும். மற்றும் புருஷாளைவிட ஸ்திரீகளுக்கு 10-12 தடவைகள் அதிகமாயும், புருஷன் உட்கார்ந்திருப்பதைவிட நிற்கும்போது 10-12 தடவை அதிகமாயும் நடக்கும். கஷ்டப்பட்டு வேலைசெய்து உட்கார்ந்தவுடன் நாடியானது விசேஷமாய் படபடத்துநடக்கும், சற்றுப் படுத்து தூங்கி



களைப்பாரிஎழுந்தால் அப்பொழுது படபடப்பு அடங்கி, சமஸ்திதிக்கிவந்துசேரும். மேல்நாட்டார் இவ்வித நாடி நடையை சில கருவிகளின் சாதனங்களால் மாத்திரமே காண்கின்றனர். ஆனால் இந்துதேசத்திய ஹக்கீம்களும் நாட்டுவைத்தியர்களும் நோயாளியின் வாயால் கேட்டு தெரிந்துக்கொள்ளாமலும், யாதொருகருவிகளின் சாதனமின்றியும், நாடிபரீக்ஷையினாலேயே வியாதிஇன்னதென்றும் அன்று அவாள்சாப்பிட்டவஸ்து இன்னதென்றும் கண்டுசொல்கின்றனர். வெகுகால அனுபவசாலிகளே அவ்விதம் கண்டுசொல்லக் கூடியவர்கள். இக்காலத்தில் அரைகுறையாய்கற்று வைத்தியவேடம் பூண்ட வேஷதாரிகளால் அவ்விதம் கண்டுபிடிப்பது அசாத்தியமான காரியமாகும்.

## திருதோஷங்களின் ஸ்வபாவமும் உபயோகமும்.

### 1 வாதம்.

வாதம்:— இது பிரிதிவியின்அம்சம் குளிர்ச்சியும் வரட்க்ஷியுமான ஸ்பாவகுணமுடையது. இது குளிர்ச்சியும் வரட்சியுமான வஸ்துக்களினால் அதிகரித்தும், அதன்சம்மந்தவியாதிகளே உண்டாகி அதற்கெதிரான சூடும் கொழுமையுமான வஸ்துக்களினால் நிவர்த்தியாகக் கூடியது. இரத்தத்தின்உஷ்ணமானது பித்தத்தின்உஷ்ணத்தைவிட குறைந்திருக்கும். இதுபோல் பித்தத்தின் குளிர்ச்சியும், சிலேத்துமத்தின் குளிர்ச்சியிலும் குறைந்தது. நமது திரேகத்தில் இரத்தமானது பரவிக்கொண்டிருக்கும். அது மிகவும் தெளிந்த திரவரூபமானதால் ஓரிடத்தில் தங்கிவிடாமல் பரவும்சமயத்தில் கூடச்சென்று அந்தந்த இடங்களுக்குத்தகுந்தபடி வாதநீரானது இரத்தத்தை கெட்டியாக்கி பதப்படுத்துகிறது. ஓர்சமயம் நரம்புகள் அறுபட்டாலும் காயம்பட்டாலும் திரேகத்திலுள்ள இரத்தம்யாவும் வெளிப்பட்டுவிடாமலிருக்கும்பொருட்டு இந்த வாதநீரானது இரத்தம் வெளியில் ஓடுவதை நிதானப்படுத்தி உரையச்செய்யும். இதனால் ஓர்சிறிய காயத்தினால் உண்டாகக்கூடிய பெருத்தஅபாயத்தினின்றும் தப்புவிக்கும்பொருட்டு கடவுள் இவ்விதமாய் உண்டாக்கிஇருக்கிறார்;

## 2 பித்தம்.

பித்தம்:—பித்தமானது தேயுவின் அம்சமானதால் சூடும்வரட்சியுமானது புளிப்பான ருசியானது. பித்தமதிகரித்து வாந்தியாகும்போது, இரைப்பையில் எரிச்சலும் தொண்டை எரிதலும் புண்போல் தோன்றுதலும், பேதியாகும்போது ஆசன எரிச்சலும் உண்டாகும். இது சூடும் வரட்ஷியுமான வியாதிகளை உண்டாக்குவதும் குளிர்ச்சியும் கொழுமையுமான வஸ்துக்களால் குறைவதும் இதன் ஸ்வபாவம். பித்தமானது தன்உஷ்ணத்தினால் இரக்தசத்தை உஷ்ணிக்கச்செய்து இளக்கி மிகவும் சிறிய நரம்புகளிலும் செலுத்தி உடலெங்கும் பரவச்செய்யும் இரத்தத்திற்கு பித்தத்தின் உதவி குறைந்தால் இரத்தம் பரவுதல் குறையும் ஏனெனில் இரத்தத்துடன் வாதம் சேருவதால் குளிமையினால் தன் ஸ்வபாவநிலைமையைவிட மிகவும் கடித்துவிடுவதால் ரத்தம் நுண்ணியநரம்புகளின் வழியாயும் பரவசக்தியற்றதாகிறது. இதுபோன்ற சமயங்களில்தான் வாதவ்வியாதிகள் காணுவதுவழக்கம். இதுவுமன்றி ஹிருதயமானது சகல உறுப்புகளுக்கும் ஆகாரமாயிருப்பதாலும், தனிச்சத்துக்களை ஆகாரமாய்க்கொள்ளும் சிலஉறுப்புகளுக்கு இது உணவாக உதவுகிறது.

இதன் செய்கைகள்:—பித்தநீரானது ஈரலிலுண்டாகி ஈரலுக்குக் கீழ்புறத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிற பித்தப்பையில் தங்கி இருக்கும். இப்பித்தப் பையிற்கும் துணைக்குக்ஷிக்கும் சம்மந்தமான ஓர் குழலின் வழியாய் அவசியமான சில சமயங்களில் குடலிற்சென்று அங்கிருக்கும் கபத்தையும் ஆகாரத்தையும் ஜீர்ணிக்க தகித்துவிடும். ஈரலில் ஜனிக்கும் பித்தநீரானது பாதி இரத்ததாதுடனும், மற்றபாதி பித்தப்பைக்குள்ளும் போய் சேரும். அப்படி சேராமல் ஈரலிலேயே தங்கும்பக்ஷத்தில் ஈரல் வீங்கி, அழுகி துர்க்கந்தமடையும். அக்காலத்தில் நடுக்கல், சுரம்முதலியதும்காணும். அது நீர்ஸ்தானங்களில் சேரும்போது நீர்மஞ்



சளித்தல் எரிச்சல் அதிஉஷ்ணம் முதலியனவும் காணும். பித்தநீர் எங்கு அதிகம்தங்கினாலும் அந்த பாகத்தில் சற்று சூடும் எரிச்சலும் சில சமயம் கொப்பளங்களுண்டாவதும், இரத்தகட்டிகளுண்டாவதுமுண்டு. பித்தநீர் அளவிற் கதிகமாய் குடலில் விழுந்தால் பித்தக்கழிச்சல் பேதி முதலிய துற்குணங்களும் காணும்.

## 3 சிலேத்துமம்.

இது அப்புவின் சுவபாவமாகிய குளிர்ச்சியும் கொழுமையுமான குணமுடையது. இது அதிகரித்தகாலத்தில் கொழுமையும் குளிர்ச்சியுமான வியாதிகளை காண்பதும், சூடும் வரட்க்ஷியுமான வஸ்துக்களினால் சாந்தப்படுவதும் வழக்கம். இது கபஸ்வபாவமுடைய மூளை மூளைக்கொடி இவைபோன்றவைகளுக்கு உணவாகிறது. இரத்தமானது கீல்களிலும் உறுப்புகளிலும் தங்கி அவற்றை இறுகும்படி அதற்குபலத்தையும் பசைத்தன்மையையு முண்டாக்குவதுடன்எக்காரணத்தினாலேனும் ஆகாரம்முதலியகுறைவின் காரணங்களால் இரத்தம் குறைந்தகாலத்திலும் இரத்தம் போதாத போதும் இரத்தபாக மாறி உபயோகப்படுவதும், கீல்களும் தசைகளும் வரட்க்ஷியடையாமல் பசையாகஉதவுகிறது.

தொடரும்

## இந்திரதிரவா.

## எவ்வித ஜ்வரம் ஜ்வரக்கட்டிகளுக்கும் ஓர் திவ்விய ஔஷதம்.

இது ஓர் அற்புத அமுர்தத் திரவம். எத்தனைநாள்பட்ட ஜ்வரமாயினும் அதைச்சார்ந்த ஜ்வரக்கட்டிகளையும் அன்னத்திவேஷம் பலஹீனம் முதலாகிய துற்குணங்களையும் யாதொரு பாதையின்றி மூன்றேவேளையில் பற்றற சுத்தமாக்கும். ஒரேநாழிகையில் எவ்வித ஜ்வரமும்நின்று சகல பாதைகளும் நிவர்த்தியாகும். இது ஜலரூபமாயுள்ளது. சாப்பிட பச்சைஜலம்போலுள்ளது. யாதொரு ருசியும் தோன்றாது, எவ்வித பத்தியமும் கிடையாது. சாப்பிட்டதினால், வாந்தியாவது, பேதியாவது மற்ற எவ்வித பாதையாவது ஒன்றுமே தோன்றாது. இதற்காக வீணாய் பல வைத்தியர்களிடமும் டாக்டர்களிடமும் ஏராளமான பணம் சிலவழித்து நெடுநாள் பலவித மருந்துகளையுண்டும் பத்தியங்களிருந்தும் வீண் சிரமப்படுகின்றார்கள். இதற்கு அவ்வித கஷ்டங்களெல்லாம் வேண்டுவதில்லை ஒரேவேளையில் குணம். மூன்றுவேளையில் பரிசுத்தமாய் நிவர்த்தியாகும். குணம் காணாவிடில் மருந்தின் கிரயம் வாப்ஸ்செய்யப்படும். நம்பிக்கையுடன் வாங்கி உபயோகிக்கலாம்.

புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1 8 0

தபால்சார்ஜ் 0 8 0

(முன்பணம் அனுப்பினால் மணியாடர் கமிஷன்இனாம்)

---

## கண்ட கூஷ்மாண்ட லேஹ்யம்.

ஸ்ரீகள், புருஷர், சிறுகுழந்தைகள் இவர்களுக்கு காசங்களுக்கு சஞ்சீவி உலர்ந்துபோகும் சரீர ஸ்வபாவமுடைய சிறுவர்கட்கும் பெரியோருக்கும் மாம்சத்தை செழிக்கச்செய்யும். க்ஷயம், உப்பசம், காசம், இருமல், பொடி இருமல் உடையவர்களுக்கு அதிக நன்மையையுண்டாக்கும். ஸ்வாஸப்பைகளுக்கும் குடலுக்கும் மிகுந்த வலிவைத் தந்து அக்கினிதீபநதையுண்டாக்கி பசியைத்தந்து ஆகாரங்களை ஜீர்ணிக்கச்செய்து நல்ல ரத்தத்தையும் தாருட்டிய சக்தியையுமுண்டாக்கும் இதன் குணம் சர்வஜனங்களுக்கும் தெரிந்ததாகையால் இதைப்பற்றி அதிகம் விவரிக்க அவசியமில்லை. உபயோகிக்கும் விதம் வயது பலத்திற்குத் தகுந்தாப்போல் தடவைக்கு இரண்டணா இடை முதல்அரைரூபாய் இடைவரையில் உபயோகிக்கலாம். பத்தியமில்லை

விலை 1 சேர் டின் 1-க்கு ரூ. 2-8-0

சுகாஞ்சன் பார்மாசி

கீல்பாக் போஸ்டு மதராஸ்.




## இல் வாழ்க்கை.

இல்வாழ்க்கையென்றால் யாது? அது என்அவசியம்? இதையேன் கடவுள் சிருஷ்டித்திருக்கிறார்? இதன் பிரயோசனம் யாது? என்பதை முதலில் கவனிப்போம்.

ஹிந்துமத சாஸ்திரத்தின்படி தேவர், முனிவர், பிதுர்க்கள் முதலியவர்களின் கடன்களை தீர்த்தல் அவசியமெனயாவருக்கும் விளங்கும். இவ்வித கடன்களாவது, கிரகஸ்தன் நாடோறும் பஞ்சமகா யஞ்ஞங்களெனும் (பிரம்ம யஞ்ஞம், பிதுர் யஞ்ஞம், தேவ யஞ்ஞம், பூத யஞ்ஞம், மானுடயஞ்ஞம், என ஐந்து) பிரமயஞ்ஞமாகிய வேதமோதுதல், பிதுர்யஞ்ஞமாகிய பிதுர்தர்ப்பணம் செய்தல், தேவயஞ்ஞமாகிய தேவர்களுக்கு அர்ச்சனை அக்னியில் ஹோமஞ்செய்தல் முதலியன, பூதயஞ்ஞமாவது பூதங்களுக்கு பலியன்னமிடுதல், மானிடயஞ்ஞமாகிய அதிதிஅப்பியாகதிகளுக்கு போஜனமிடல் முதலாகிய பஞ்சகிருத்தியங்களை நடத்தவும் இல்வாழ்கைக் குறிய தத்தம் விருப்பத்துக்கும் சக்திக்கும் தக்கபடி முனிவர் கடனை சாஸ்திர சிரவணத்தாலும், தேவர் கடனை அசுவமேதம், அயமேதம் முதலிய வேள்விகளாலும், தென்புலத்தார் கடன்களை புதல்வரைப் பெறுதலாலும் செலுத்திவரும்படிகடவுள் சிருஷ்டித்திருக்கிறார்

இவைகளை நடத்த இல்வாழ்வானே மற்றையயெல்லா ஆசிரமத்தாருக்கும் தருமநிலையும் உலகநிலையாகிய பிரபஞ்சவிற்திக்கும் ஆதாரமானவனாவன். ஆதலால் கடவுள், இவ்வுலகில் ஸ்திரீ புருஷர் எனும் இருஜாதிகளை உற்பத்திசெய்து ஒருவருக்கொருவர் ஈடுபட்டு நடக்குமாறு காமமெனுமின்பத்தையும் பாசமெனு பந்தத்தையும் படைத்திருக்கிறார். இவைகளுக்கெல்லாம் ஆதாரம் மனையாட்டியே யாவள்.

விவாகத்தினால் புத்திர சந்தானமும் இதனால் வம்சவிருத்திக்குமிடமாகிறது. காமமானது சர்வ சக்திவாய்ந்த கடவுளால் உண்டாக்கப்பட்டதேயொழிய கேவலம் மானிடரால் உண்டாக்கிக்கொள்ளக் கூடியதல்ல வெனெனில் இவ்விச்சை மானிடருக்கேயன்றி பசு பக்ஷி முதலிய சகலஜீவன்களிடத்தும் சுவபாவமாய்ஜனித்திருப்பதை நாம் பிறத்தியக்ஷமாய் காண்கிறோம். இன்னும் இராஜக்கருவிகளாகிய தலைமூளை இருதயம் முதலிய கருவிசம்மந்தமாகிய எம்மருந்திலும் தீராத மஹாரோகங்கள் ஸ்திரீசம்மந்தத்தினால் தீர்ந்திருக்கின்றனவென்று பல வைத்திய சிரோமணிகள் தங்கள் சாஸ்திரங்களில் வரைந்துள்ளார். சிலருக்கு யௌவனகாலம் சமீபித்தவுடன் நிஷ்காரணமாய் தலைநோய், தலைபாரம் ஸ்வப்னஸ்கலிதம், மனோவியாகூலம் பித்துப்பிடித்தாப்போல் ஒன்றும் தோன்றாமை, சோம்பல், விசனம், தான் உயிர்த்திருப்பதிலும் சாவது நலமென நினைத்தல், காக்கைவலி, பைத்தியம், கோபம், அகங்காரம் காமவிகாரம், பிறரிடத்தில் சம்பாஷிக்க அருவருப்பு முதலாகிய மற்றும் அநேகவித உபத்திரவங்களை யடைகின்றார்களென்றும், இதன்காரணம் அறியாது வைத்தியர்கள் இவைகளை வியாதிகளென நினைத்து தங்களாலியன்ற பலவித அவுஷதசிகிச்சைகள் செய்தும்தீராது தேகத்தை பாழாக்கிஇருக்கின்றார்களென்றும், கடைசியாய் அவைகள் விவாகத்தினால் சகலதுற்குணங்களும் நீங்கி சவுக்கியமடைந்து எப்பொழுதும்போல் சௌகரியமாகவும், முன்னிலும் புத்திகூர்மையுள்ளவர்களாகவும் வாழ்ந்திருப்பதாக வைத்திய கிரந்தங்களில் காணலாம். தேகசுபாவத்திற்குறிய காலங்களில் மணந்து இன்பத்தை அனுபவிக்காவிடில் இதனால் பல மாகாரோகங்கள் உண்டாகின்றன என்பதற்கு திருஷ்டாந்தங்கள் சாஸ்திரங்களில் பல உள.

ஆதலால் நாம் ஏற்றகாலங்களில் விவாகம் பண்ணுவதினால் விதிப்படியும், காலதேசம் பலம் முதலியவைகளுக்கிணங்க முறை தவாது மணந்துவாழ்வதாலும், ஸ்திரீ புருஷர்கள் ஒருவரையொ



ருவர் அன்பாய் நேசிக்கவும் சாப்பாடு, குடும்பவிருத்தி திரவியம் சம்பாதித்தல் சிக்கனமாய் செலவழித்தல் திரவியம் சேர்த்தல் முதலிய அக்கரைகளும் மற்றும் பல நன்மைகளும் உண்டாமென்பது யாவரும் ஒப்பக்கூடிய தீர்மானமேயாம். ஆதலால் இதுவே ஆயுர்வேத பண்டிதர்களின் சம்மதமுமாயிருக்கிறது.

இப்பிரபஞ்சத்தில் மானிடரின் ஜீவிதகாலத்திற்கு அவசியமானதாகக்கொள்ளும் பல பிறயத்தினங்களில், விவாஹமானது மிகவும் பிரயோஜனகரமானதென்று யாவருக்கும் விளங்கும். விவாகத்தினாலேயே மேல்கண்ட பலதுன்பங்களினின்றும் தப்பித்து பலவித சுகங்களையு மனுபவிப்பதுடன் சத்புத்திரர்களையடைவது முக்கியபலமென வேதசாஸ்திரங்கள் முறையிடுவதால், இதை சகலரும் ஒப்புக்கொள்வார்கள். இதைப்பற்றி சற்று யோசிக்கில் அதன் யதார்த்தம் நன்குவிளங்கும். எப்படியெனில்; தன்குடும்பத்தில் ஜனித்த சத்புத்திரர்கள் பெற்றோர் தங்கள் ஜீவிதகாலத்தில் செய்து நிறைவேராது குறைநின்ற தர்மகாரியங்களையும், குலாசார தர்மங்களையும், நிறைவேற்றியும், அதிதி அப்பியாகதிகளுக்கு அற்கிய பாத்தியாதிகளைக் கொடுத்து, போஜனாதிகளினால் திருப்தி செய்வித்தும், பசுவாதி கால்நடைகளினிடம் கனிகரித்து தீனிகொடுத்தும், பூததிருப்தி யுண்டாக்கி, வம்சத்தை, நன்மார்க்கத்தில் பேரும் பிரதிஷ்டையுமாய் நடத்துகின்றனர்.

இவ்வளவு நன்மைகளைப் பயக்கும் விவாகத்தினால் சதிபதிகள் ஒருவரையொருவர் நேசித்து கஷ்டங்களை நீக்கி சுகங்களையடையும் மார்க்கங்களை, ஆலோசித்துக்கொண்டு ஒருவரையொருவர் முழு நம்பிக்கையுடன் நேசித்து வாழ்கின்றார்கள். இவ்விதமாய் நாம் பத்திய பூஷணத்தினால் பிறக்கியாதியடைந்த நள தமயந்தி, சாவித்திரீ சத்தியவான், சத்தியஹரிச்சந்திர சந்திரமதி முதலியவர்களுடைய சரித்திரங்களை வாசிக்கும் போதுண்டாகும் ஆனந்த பரவசத்தை அளவிடமுடியுமோ? ஹிந்துக்களில் இவ்விதவிவாஹம் 8விதமென சாஸ்திரங்களில் சொல்லப்பட்டது. அவையாவன:—

## எண்வித விவாஹங்கள்.

(1) பிராம்மியவிவாஹம்:—ஆசார சீலியாயுள்ள கன்னிகையை வரனுக்கு பூஜைசெய்து தானங்கொடுத்தல்.

(2) தைவவிவாஹம்:—யக்கியாதி கிருத்தியங்கள் செய்யும் காலத்தில், அந்த புருஷனுக்கு கன்னிகையை அலங்கரித்து தானம் செய்தல்.

(3) அர்ஷவிவாகம்:—வரனிடமிருந்து இறண்டொரு பசுக்களை வாங்கிக்கொண்டு பதிலுக்கு கன்னிகையைக்கொடுத்தால். (இதுகன்னிகைக்குபதில் வாங்கிக்கொள்வதால் இந்த விவாஹம் அவ்வளவு சிலாக்கியமாகாது.)

(4) பிராஜாபத்தியம்:—நீங்களிருவரும்கலந்து தற்மமாய் நடந்து சுகமாய் காலம் சழியுங்களென்று ஒருபெண்ணை ஒருபிள்ளைக்கு தானம் கொடுத்தல். இதுவே உத்தம விவாஹம்.

(5) ஆசுரவிவாகம்:—கன்னிகைக்காக திரவியம் கொடுத்து கன்னிகையை பெருதல்.

தத்காலம் இவ்வித விவாஹங்கள்தான் விசேஷமாய் பிராம்மணர்களில் நடக்கின்றது. கலியாணம் செய்துக்கொள்ளும்பொருட்டு பெண்ணேவென்று அலையும் பிள்ளையிடம் 500, 1000, 5000, வரையில் அவனுக்குள்ள சொத்தையெல்லாம் விற்றாவது பெண்ணிற்குபதில் பரியமாய் வாங்கிக்கொண்டு தன்பெண்ணைவிற்று, பேருக்கு கன்னிகாதானம் செய்வதாய் ஜெம்பமாய் கடிதங்கள் மாத்திரம் எழுதிகின்றனர். மாட்டை விற்பதுபோல் தங்கள் வயற்றில் ஜனித்த குழந்தையை ஒருவருக்கு விற்று, அப்பெண்ணையும் மருமகப்பிள்ளையையும் அலையவிட்டு தாங்கள் சுகமாய் காலங் கழிக்கின்றனர். இவர்களின் அறிவை யாதெனச் சொல்லலாம்?



மருமகப்பிள்ளை எனில் (மகளை மருவும் பிள்ளை.) அதாவது தன் மகளுக்கு இன்ப சுகங்களைத்தந்து மணந்து வாழும்பிள்ளையெனவும், மற்றொருவிதமாவது மறுமகன் எனில், தன் மகனைப்போன்ற மற்றொரு மகன் எனவும் பொருள்படும். எப்படியாயினும், தன்மகனுக்கொப்பானவனேயன்றோ? "பெண்ணைக் கொடுத்தையோ கண்ணைக் கொடுத்தையோ" என்றபடி, தான் ஓர்பெண்ணை விவாகமாடி அவளுக்கு வேண்டியவைகளையெல்லாம் கொடுத்துஅவளுடன் மருவி இன்பசுகங்களை யனுபவித்து ஈன்றெடுத்துமார்மேலும் தோள்மேலும் வளர்த்தி சீராட்டிப் பாராட்டி வளர்த்த தன் இருகண்போன்ற ஆண் பெண்குழந்தைகளை சமமாக வல்லவோ பாவிக்கவேண்டும்?. திரவியாபேக்ஷையினால் தன் ஒருகண்ணை நோண்டி ஒருவருக்கு விற்று அதனாலாகிய திரவியத்தைக்கொண்டு மற்றொரு கண்ணுக்கு மை தீட்டி விலையுயர்ந்த கண்ணாடிகளை வாங்கி மாட்டிக் களிப்படைய யார்தான் இஷ்டப்படுவார்? பைத்தியக்காரன்கூட இவ்விதம் செய்யானன்றோ? ஒருகண்ணைப்போன்ற பெண்ணை விற்று, அந்தனத்தை மற்றொரு கண்ணைப்போன்ற பிள்ளைக்கோ தனக்கோ சேர்த்துவைக்கும் வஞ்சனையாளர்களை நாம் பென்னவென்று சொல்லலாம்? இதைவிட தங்கள் பெண்சாதிகளை விற்று திரவியம் சம்பாதித்து சேர்த்து வைக்கலாமே? இவர்களை ஆள்வெட்டி பச்சை கசாப்காரரெனவே சொல்லலாம். தன்வயற்றில் ஜனித்த குழந்தைகள் யாவருக்கும்தன் சொத்துபாவும் பாத்தியமேயன்றோ? அப்படிஇருக்க, ஆணுக்குமாத்திரம் சொத்தைக்கொடுத்து, பொண்ணுக்கு யாதொரு சொத்தும் கொடுக்காவிடினும் அப்பெண்போய் வாழ்க்கப்படுமிடத்திலாவது சுகப்படாம லிருக்கும் பொருட்டு, அவனைகடனாளியாக்கி அவனுக்குள்ள சொத்தையாவது விற்றுக்கொடுக்கும்படி கைப்பணம் வாங்கிக்கொண்டு இப்பெண்ணை அவனுக்கு விற்று, கடைசியாய்அப்பெண்ணும் பிள்ளையும் வறுமையுற்று பலவித இடஞ்சல்களில் சிக்கி துன்பப்படும்படி செய்ய இவர்களே காரணமாகின்றனர். இவ்வித துர்நடவடிக்கை அநேகமாய் பிராம்மண்ணர்களிடமும்

சில இந்துக்களிடமுமே காண்கிறோம். இவ்வித வஞ்சனை மகம்மதியர்களிடமும் மலையாளநாட்டிலும், இதாமதத்தினரிடமும் காண்பதரிது. பெண்ணுக்குக்கொடுக்க, தன்னிடம் சொத்தில்லாததினாலோ அல்லது இருந்தும் இஷ்டமில்லாததினாலோ, கொடாவிடினும் பதிலுக்கு பணம்வாங்காது ஒருவருக்குக்கொடுத்து சுகமாய் வாழச் செய்வதே தர்மமும், கடவுளுக்கு சம்மதமுமாகும். பணம்பெற்று பெண் கொடுப்போர் பாழ்நரகையடைவாரென சாஸ்திரங்களில் கூறியுள்ளதால் இவ்வித துற்குணமுடையவர்கள் இனியாவது மேல்கண்ட விஷயத்தை கவனித்து நடப்பாராக.

(6) காந்தர்வவிவாகம்:—வரனுடைய அல்லது பெண்ணினுடைய காமத்தினால் ஒருவரை யொருவர் நேசித்து தங்களிஷ்டப்படி யேற்றுக்கொண்டு மருவுதல்.

(7) ராக்ஷசவிவாஹம்:—ஓர்கன்னிகையை பெறுவதற்காக அப் பெண்ணின் பெற்றோர் போஷகர்களைக் கொன்றுவது குத்தியாவது கிழித்தாவது, கன்னிகையை பலோத்காரமாய் எடுத்துக்கொண்டு போதல். [ஸ்ரீகிருஷ்ணபகவான் ருக்மணியை விவாகமாடிய விதம் இதுவே.]

(8) பைசாசவிவாகம்:— தூங்கிக்கொண்டிருக்குமவளை யாவது தன்னை மறந்து மயக்குற்றிருக்குமவளையாவது அவள்சம்மதமின்றி ரஹஸியமாய் ரமித்தல். மேல்கண்ட பிராம்ஹ்ய, தைவ அர்ஷ பிரா ஜாபத்திய விவாஹங்களில், அர்ஷவிவாகம் தவிர மற்ற மூன்றும் கடைசியிலிருந்து ஒன்றைவிடவொன்று உத்தமமானது. ராக்ஷச பிசாசவிவாஹங்கள் தயாரஹிதமானதும் மிகவும் அதர்மமானதுமாயிருப்பதால், அவைகளை நாம்அனுஷ்டிப்பது மிகவும் அதர்மமாகும்.

பிராம்ஹ்யம், தைவ, அர்ஷ, பிராஜாபத்திய விவாஹங்கள் பிராம்மணர்களுக்கும், ராக்ஷசவிவாகம் க்ஷத்திரியர்களுக்கும், அசுரவிவாகம் வைசிய சூத்திரர்களுக்கும், தகுமெனவும், நாரதரின் வசனப்பிறமாணத்தில் சொல்லியிருக்கிறது.



காந்தர்வம்முதல் பிராம்ஹ்யம்வரையில்ஆறுவித விவாகங்களும் பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும், தகுமெனவும் காந்தர்வம்முதல, நான்கும் நன்மையென்றும், ராக்ஷசபைசாச விவாகங்கள், யாருக்கும் தகாதெனவும் மனுஸ்மிரிதியில் வரைந்துள்ளது. இதனால் பிராம்மணர்களும் காந்தர்வ விவாகம் செய்துக்கொள்ளலாமென்று ஏற்பட்டாலும், அப்படி செய்துக்கொள்ளப்பட்ட கன்னிகைக்கு புருஷனுடைய கோத்திரம் வராதென்றும், அவள் எந்தகர்மத்திற்கும் அர்கமாகமாட்டாளென்றும் அவ்விதம் செய்வது கேவலம் காமஹேதுகமானதும் மந்திரகிரியாரஹிதமானதாலும் அது பிராம்மணர்களுக்கு சிலாக்கியமல்லவென்றும் சிலபிறமாணங்களு முண்டு.

ராக்ஷச பிசாச விவாகங்கள் மிகவும் நிந்திக்கக்கூடியதும் அநீதியானதுமாயிருந்தும் அவைகளை சாஸ்திரங்கள் அங்கீகரித்தது மிகவும் ஆச்சரியகரமாயிருக்கிறது. பலவந்தமாய் கொண்டுபோகப்பட்டஸ்திரீ அவனுக்கே பாரியையாயிருக்கவேண்டுமென நமது சாஸ்திரங்களில் எழுதிஇருப்பது மிகவும் அதர்மமாய் தோன்றினும்; அந்தவம்சபரிசுத்தம் கெடாமலிருக்கவே இவ்விதம் ஏறபடுத்தியதாக தோன்றுகிறது. இந்த அபிப்பிராயத்தை மேல்நாட்டு பிறகுர்தி தத்துவ ஆராச்சிசெய்யும் சாஸ்திரீகர்கள் இப்பால் இவ்விஷயத்தை நியாயமென கண்டுபிடித்திருக்கிறார்கள்.

[ ? எப்படிஎனில்:— ஒருஸ்திரீயானவள் ஓர் புருஷனை, மருவி கற்பம்தரித்து பிறசவித்தபிறகு, மருபடி வேறொருவனுக்கு கற்பம் தரித்தால், அக்குழந்தையும் முதல் கலந்தமனிதனையே ஒத்திருப்பதாயும், இந்தவிஷயம் பசுக்களிலும் மற்ற மிருகாதிகளிலும் கூட வியாபித்திருப்பதாகவும், மேலான பெண்குதிரைகளை மட்டஜாதி ஆண் குதிரைகளுடன் சேரவிட்டு அடுத்ததடவையில் மேல் ஜாதியுடன் கலக்கவிட்டாலும்கூட அந்தகுட்டிகள் முதல்தடவை கலந்த மட்டஜாதியையே போன்று இருப்பதாகவும், மற்றும் பல

உதாஹரணங்களுடன் ஆர்டின் என்னும் சாஸ்திரி விவரித்து, மானிடரிலும் இதுபோல் நடக்கிறதென்று கீழ்கண்ட உதாஹரணத்தையும் சொல்லியிருக்கிறார். அதாவது, ஓர் ஐரோப்பா வெள்ளைக்காரி (அல்லது துரைசானி) ஓர் கருத்தமனிதனோடு (இந்தியனோடு) கலந்து அடுத்ததடவை தான் மேல்நாட்டு துரைபோடு கலந்து சர்ப்பமாய் பிள்ளை பெற்றபோது இக்குழந்தையும் இந்தியனையே ஒத்திருந்ததாயும் எழுதி இருக்கிறார். – மேல்கண்ட விவாஹங்களில் மேல்நாட்டார் நடத்தும் விவாகமானது அநேகமாய் இந்த காந்தர்வ விவாகத்தையே ஒத்திருக்கிறது. இக்காலத்தில் இந்துக்களில் சில நாகரீகிகள் இவ்வித் விவாகத்தை யடைய விரும்புகின்றனர்.

மேல்நாட்டார் விவாகவிஷயத்தில் இந்தியர்களைப்போல் பெரியோர் இஷ்டப்படி நடந்தும் விவாகங்களைப்போலல்லாது, ஸ்திரீபுருஷர்கள் இருவரும் வயதுவந்தபிறகு, அந்தப்பெண்கள் தங்களிஷ்டப்படி பலபுருஷர்களுடன் சிநேகித்து கடைசியாய் யார்தங்களுக்கு இஷ்டமோ அந்தபுருஷனை வறிக்கின்றார்கள். இக்காரணத்தினால் ஓர் பெண்ணை பல எவ்வளபுருஷர்கள் நேசித்து ஒவ்வொருவனும் தன்னை மணக்கும்படி செய்ய பிரயத்னிக்கிறான். பல சமயங்களில் அப்பெண்ணும் புருஷனும் பலதடவைகளில் ஏகாந்தமாய் சரசசல்லாபமான வார்த்தைகளாடக்கூடும். இந்துக்களில் புஷ்பவதியான ஒருபெண் விவாகத்திற்குமுந்தி பலபேர் பார்க்கும்படி வரவிடாமலும் எப்புருஷனையும் கண்ணெடுத்துப்பார்க்கவொட்டாமலும், எவ்வளவோ காபந்தில் வைத்திருந்தும், எப்படியோ இதற்கும் மீறி பல குற்றங்கள் நடந்துவிடுவதை நாம் பிரத்தியட்க்ஷமாய் காணும்பொழுது, இவ்வித சட்டதிட்டங்கள் யாதுமின்றி, தங்களிஷ்டப்படி எப்புருஷர்களுடனும் சிநேகித்தும் தொட்டுக்கொண்டும் ஏகாந்தமாய் திரிந்தும், கடசியாய் தனக்கிஷ்டமான ஓர் புருஷனை தான் நேமிக்கலாமென்றும் பழக்கமுள்ள மேல்நாட்டாரில், ஸ்திரீ புருஷர்கள் ஏகாந்தமாயுள்ள சமயங்களில் காமத்திற் குட்படாமலிருப்பது மிகவும் துற்லபம்.

REG NO. M. 1218.

சந்தா ...............

இப்பத்திரிகையின் வருடசந்தா
போஸ்டேஜ் உள்பட
உள்நாட்டிற்கு ... ... ரூ.1 8 0
வெளிநாட்டிற்கு ... ரூ.2 0 0

M. V. Krishnasamaiyer SukhanjanPress Brindavan, Kilpauk, p o, Madras.

# இந்திரதிரவா.

## எவ்வித ஜ்வரம் ஜ்வரக்கட்டிகளுக்கும் ஓர் திவ்விய ஔஷதம்.

இது ஓர் அர்புத அமுர்தத் திரவம். எத்தனைநாள்பட்ட ஜ்வரமாயினும் அதைச்சார்ந்த ஜ்வரக்கட்டிகளையும் அன்னத்வேஷம் பலஹீனம் முதலாகிய துர்குணங்களையும் யாதொரு பாதையின்றி மூன்றேவேளையில் பற்றற சுத்தமாய் நீக்கி குணமளிக்கும். ஒரேவேளையில் ஜ்வரம்நின்று சகல பாதைகளும் நிவர்த்தியாகும். ஜலரூபமாயுள்ளது. சாப்பிட பச்சைஜலம்போலுள்ளது. யாதொரு ருசியும் தோன்றாது, எவ்வித பத்தியமும் கிடையாது. சாப்பிட்டதினால், வாந்தியாவது, பேதியாவது மற்ற எவ்வித பாதையாவது ஒன்றுமே தோன்றாது. இதற்காக வீணாய் பல வைத்தியர்களிடமும் டாக்டர்களிடமும் ஏராளமான பணம் செலவழித்து நெடுநாள் பலவித மருந்துகளையுண்டும் பத்தியங்களிருந்தும் வீண் சிரமப்படுகின்றார்கள். இதற்கு அவ்வித கஷ்டங்களெல்லாம் வேண்டுவதில்லை ஒரேவேளையில் குணம், மூன்றுவேளையில் பரிசுத்தமாய் நிவர்த்தியாகும். குணம் காணாவிடில் மருந்தின் கிரயம் வாபஸ்செய்யப்படும். நம்பிக்கையுடன் வாங்கி உபயோகிக்கலாம்.

2 அவுன்ஸ் புட்டி 1-க்கு கிரயம் ரூபா 2 0 0

தபால்சார்ஜ் 0 8 0

(முன்பணம் அனுப்பினால் தபால்சார்ஜ் கிடையாது.)

## கண்ட கூஷ்மாண்ட லேஹ்யம்.

ஸ்திரீகள், புருஷர், சிறுகுழந்தைகள் இவர்களுக்கு காசங்களுக்கு சஞ்சீவி. உலர்ந்துபோகும் சரீர ஸ்வபாவமுடைய சிறுவர்கட்கும் பெரியோருக்கும் மாம்சத்தை செழிக்கச்செய்யும். க்ஷயம், உப்பசம், காசம், இருமல், பொடி இருமல் உடையவர்களுக்கு அதிக நன்மையையுண்டாக்கும். ஸ்வாஸப்பைகளுக்கும் குடலுக்கும் மிகுந்த வலிமையைத் தந்து அக்கினிதீபநத்தையுண்டாக்கி பசியைத்தந்து ஆகாரங்களை ஜீர்ணிக்கச்செய்து நல்ல ரத்தத்தையும் தாருட்டிய சக்தியையுமுண்டாக்கும் இதன் குணம் சர்வஜனங்களுக்கும் தெரிந்ததாகையால் இதைப்பற்றி அதிகம் விவரிக்க அவசியமில்லை. உபயோகிக்கும் விதம்.

வயது பலத்திற்குத் தகுந்தாப்போல் தடவைக்கு இரண்டணா இடை முதல் அரைரூபாய் இடைவரையில் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

விலை 1 சேர் டின் 1-க்கு ரூ. 2 8 0

அரைசேர் டின் 1-க்கு ரூ. 1 4 0

சுதாஞ்சன் பர்மசி ஜில்பாக் மதராஸ்.

JL
LD m21, N22IC A
N27.1.5.8